# 18
# உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்கள்
Blessings of Resurrection

சிலுவை வார்த்தைகள் ஏழில் அநேகப் பிரசங்கங்கள் கேட்டிருந்தாலும் இயேசுவானவர் உயிர்த்தெழுந்தபின் மொழிந்த வார்த்தைகளில் நாம் அதிகம் கேட்டதில்லை. சிலுவையின்றி உயிர்த்தெழுதலில்லை. ஆனால் ''நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புர வாக்கப்பட்டபின் நாம் அவருடைய **ஜீவனாலே** இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே'' (ரோ 5:10). உயிர்த்தெழுந்தபின் கிறிஸ்துவானவர் திருவாய் மலர்ந்த ஒவ்வொரு வார்த்தையும் கிறிஸ்துவோடு நமது புது வாழ்வின் ஓர் ஆசீர்வாதமான அம்சத்தை அடக்கியுள்ளது.

### *1. பரலோக வாழ்வு*

யோவான் 20:17, ''நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாபினி டத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன்.''

### *2. வசன வாழ்வு*

லூக்கா 24:27, ''மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.''

### *3. விசுவாச வாழ்வு*

யோவான் 20:29, ''அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்; காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்''

### *4. நேச வாழ்வு*

யோவான் 21:15-17, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? ... என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக ... யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? ... என் ஆடுகளை மேய்ப்பாயாக ... யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா? ... என் ஆடுகளை மேய்ப்பாயாக.''

### *5. வல்லமை வாழ்வு*

யோவான் 20:22; அப் 1:8, ''பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள் ளுங்கள் ... பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலமடைவீர்கள்.''

### *6. சாட்சி வாழ்வு*

மாற்கு 16:15; அப் 1:8, ''நீங்கள் உலகமெங்கும் போய், படைப்பு அனைத்திற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் ... பூவுலகின் முடிவு வரை எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.''

### *7. ஐக்கிய வாழ்வு*

மத்தேயு 28:20, ''இதோ, உலகத்தின் முடிவு வரை எல்லா நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.''

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் இம்மகிமையான வார்த்தைகளை மனனம் செய்து தியானிப்பது நமது வெற்றியையும் சாதக வாழ்வையும் அறிக்கையிட ஏதுவாயிருக்கும். ''இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாச வார்த்தையே. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' (ரோ 10:8,9).

*''கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால்,*
*எங்கள் பிரசங்கமும் வீண், உங்கள் விசுவாசமும் வீண்.*
*கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்;*
*நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்''*
*(1 கொரி 15:14,17)*